# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று பரமக்குடி, தூத்துக்குடியில் உரையாற்றுகிறார்!

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், நான்காம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 10-ஆம் தேதி தஞ்சாவூரில் தொடங்கினார்.**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று பரமக்குடி, தூத்துக்குடியில் உரையாற்றுகிறார்!**



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **12.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | பரமக்குடி (பொதுக்கூட்டம்) | பரமக்குடி, திருவாடானை, ராமநாதபுரம், முதுகுளத்தூர் |
| மாலை 7 மணி | தூத்துக்குடி (பொதுக்கூட்டம்) | விளாத்திகுளம், தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவைகுண்டம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி |

குறிப்பு:

❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 08.04.2026

தலைமைக் கழகம்,
தி.மு.க.

### என்னை மிரட்டிப் பார்க்கலாம் என்று நினைக்காதீர்கள் எடப்பாடி பழனிசாமி!

# நான் கலைஞரின் மகள், இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சமாட்டேன்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி., காட்டமான பதிலடி!

**திருச்சி, ஏப்.12-**

**விருதுநகர் மாவட்டம் திருச்சுழி சட்டமன்றத் தொகுதியில், நேற்று முன்தினம் (10.04.2026) தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் போட்டியிடும் விருதுநகர் வடக்கு மாவட்ட செயலாளரும், வேட்பாளருமான தங்கம் தென்னரசுவை ஆதரித்து, திருச்சுழி - காரியாபட்டி, நரிக்குடி, அருப்புக்கோட்டை சாலை சந்திப்பு பகுதியில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு, பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.**



அப்போது பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டதாவது :-

நான் தொடர்ந்து எடப்பாடி பழனிசாமியை விமர்சனம் செய்கிறேன் என்பதற்காக, அவர் தரம் தாழ்ந்து என்னை குறிவைத்துப் பேசுகிறார்; "நீங்கள் மீண்டும் சிறைக்குச் செல்வீர்கள்" என்று கூறுகிறார்.

எடப்பாடி பழனிசாமி அவர்களே, ஒன்றே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என் மீது பொய் வழக்குப் போடப்பட்டது உண்மை. அந்த வழக்கை நான் எதிர்கொண்டு, என் மீது குற்றம் இல்லை என்று நிரூபிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டு இருக்கிறேன்.

நான் நினைத்திருந்தால் என்னை தவறாகச் சித்தரித்து சிறையில் வைத்ததற்காக, வைத்தவர்கள் மீது வழக்குப் போட்டு இருக்கலாம். ஆனால், நான் குற்றமற்றவளாக விடுதலை செய்யப்பட்டுள்ளேன். என் மீதான வழக்கு நிலுவையில் இல்லை; அது மேல்முறையீட்டில் உள்ளது. இந்த இரண்டிற்கும் வித்தியாசம் உள்ளது. ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு சிறைக்குச் சென்றவர் யார் என்பதை அவர் நினைத்துப் பார்க்க வேண்டும். எடப்பாடி பழனிசாமி மீது நிறைய வழக்குகள் உள்ளன; அதை அவர் நினைவில் வைத்திருந்தால் போதும்.

என்னைப் பார்த்துச் சொல்கிறார், தொடர்ந்து இப்படிப் பேசிக் கொண்டிருந்தால் சிறைக்குச் செல்ல வேண்டியதாகிவிடும் என்று. நான் கேட்கிறேன்? உங்களை எதிர்த்துப் பேசினால் சிறைக்கு போவீர்கள் என்று மிரட்டுவீர்களா? இதையே தான் பா.ஜ.க. செய்து கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சியில் உள்ளவர்களின் மீது சிபிஐ, வருமானவரித் துறை, அமலாக்கத்துறை ஆகியவற்றின் மூலம் வழக்குகள் ஏவப்படுகின்றன. உங்களுக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம்? இதனால்தான் நாம் சொல்கிறோம். "அண்ணா தி.மு.க.வை, அமித்ஷா தி.மு.க.வாக மாற்றிவிட்டார்கள்" என்று.

எடப்பாடி பழனிச்சாமி என்னை மிரட்டப்பார்க்கிறார். நான் அவருக்கு சொல்கிறேன், நான் கலைஞர் முத்துவேல் கருணாநிதியின் மகள்; இந்தச் சலசலப்புகளுக்கு எல்லாம் நான் அஞ்சப்போவதில்லை. பெண் என்பதால் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று நினைக்கா தீர்கள்.

உங்களைப் போன்ற 100 பேரை வென்ற கலைஞரின் மகள் நான். தந்தை பெரியாரின் பாசறையில் இணைந்து அரசியலுக்கு வந்த ஒருவராக நான் இருக்கிறேன். நீங்கள் மிரட்ட மிரட்ட, நான் இன்னும் அதிகமாகப் பேசுவேன். என்னை மிரட்டிப் பார்க்கலாம் என்று நினைக்காதீர்கள். தவறான விஷயங்களைப் பேசாதீர்கள்.

இவ்வாறு - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி, கண்டோன்மெண்ட் பல்லாவரம் பகுதி 5, 6, 7 ஆகிய வட்டங்களில் தோழமைக் கட்சி நிர்வாகிகள், தோழர்களுடன் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் தா.மோ.அன்பரசன் வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அருகில் நகரச் செயலாளர் டி.பாபு, புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் திருமதி நித்யா சுகுமார் பிள்ளையார்பாளையம் பகுதியில் வாக்கு சேகரித்தார். உடன் மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பகுதி செயலாளர் சு.வெங்கடேசன், மண்டல குழு தலைவர் எஸ்.மோகன், துணை மேயர் குமரகுருநாதன், மாமன்ற உறுப்பினர் திருமதி மல்லிகா ராமகிருஷ்ணன் உள்ளிட்ட மாநகர நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் இருந்தனர்.